கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/முதலாம் அரையாண்டுப் பொதுக் கலைமாணித் தேர்வு - 2004/2005 (ஜனவரி/பெப்ரவரி 2006)

**TL 1101** தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு ஓர் அறிமுகம்

நேரம் : 02 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியிலுள்ள எல்லாவினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து ஒரு வினாவிற்கும் மூன்றாம் பகுதியிலிருந்து இரு வினாக்களுக்கும் விடை தருக.

பகுதி – I

01. (i) வரலாறு என்ற அறிவுத்துறையின் புதிய போக்குகள் நான்கினைக் குறிப்பிடுக.

(ii) சங்க இலக்கிய மரபு பற்றி எந்த இலக்கண நூல் விளக்குகிறது?

(iii) புறத்திணையியலின் உட்பிரிவுகள் யாவை?

(iv) சங்க இலக்கியங்களில் குறிக்கப்படும் இன மரபுக் குழுக்களில் எவையாவது நான்கின் பெயர் தருக.

(v) பௌத்தம் தமிழ் நாட்டின் எந்த நகரத்தில் மையம் கொண்டிருந்தது?

(vi) பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் இடம்பெறும் அகத்திணை நூல்கள் யாவை?

(vii) சிலப்பதிகாரம் இயற்றப்பட்டதன் நோக்கங்கள் யாவை?

(viii) ஆழ்வார் பாடல்களைத் தொகுத்தவர் யார்?

(ix) சமண காவியங்கள் மூன்றின் பெயர் தருக.

(x) சுப்பிரமணிபாரதி ஆசிரியராகப் பணிபுரிந்த இரு பத்திரிகைகளின் பெயர் தருக.

(3x10=30 புள்ளிகள்)

## பகுதி - II

02\. (அ) சங்க மருவிய காலத்தில் உருவாகிய நூல்களை வகைப்படுத்துக.
(ஆ) தமிழிலக்கியப் பரப்பில் இவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக.
(20 புள்ளிகள்)

03\. (அ) சோழர் காலத்தில் உருவான காவியங்கள் யாவை?
(ஆ) இக்காவியங்களை வகைப்படுத்தி இவற்றின் பண்புகளை விளக்குக.
(20 புள்ளிகள்)

## பகுதி – III

04\. 1400 – 1800 காலப்பகுதியில் உருவான தனிப்பாடல்கள் அக்கால சமூக அரசியல் நிலைமையை வெளிப்படுத்தும் முறைமையை உதாரணங்களுடன் ஆராய்க.
(25 புள்ளிகள்)

05\. சித்தர் பாடல்கள் எவ்வாறு சமூகம் சார்ந்த மாற்றுச் சிந்தனைகளை முன்வைக்கின்றன? ஆராய்க.
(25 புள்ளிகள்)

06\. 20ம் நூற்றாண்டுத் தமிழிலக்கியத்தில் சுப்பிரமணிய பாரதியின் முக்கியத்துவம் யாது என ஆராய்க.
(25 புள்ளிகள்)

*************